# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2079/66 - 2018 ජූලි මස 12 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.07.12

*2079/66 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

மேல் மாகாண மாகாண சபையின் விவசாய சேவைகள் அதிகார சபையின் திருத்தப்பட்ட நியதிச்சட்ட வரைவு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

காமினி திலகசிறி,
மேல் மாகாண விவசாய, காணி, நீர்ப்பாசனம், மீன்பிடி,
கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரம் மற்றும்
கமநல அபிவிருத்தி அமைச்சர்.

மேல் மாகாண விவசாய, காணி, நீர்ப்பாசனம், மீன்பிடி, கால்நடை உற்பத்தி
மற்றும் சுகாதாரம் மற்றும் கமநல அபிவிருத்தி அமைச்சு.
"சிராவஸ்தி இல்லம்",
புனித மார்க்கஸ் பிரணாந்து மாவத்தை,
கொழும்பு 07,
2018, யூன் 20.

**2018 ஆம் ஆண்டின் ......................... ஆம் இலக்க, மேல் மாகாண விவசாய சேவைகள் அதிகார சபை (திருத்த) நியதிச் சட்டம்**

2012 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, மேல் மாகாண விவசாய சேவைகள் அதிகார சபை நியதிச் சட்டத்தினைத் திருத்துவதற்கு உரிய நியதிச் சட்டம் ஒன்றாகும்.

இந்நியதிச் சட்டம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாண மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக.

1. இந்நியதிச் சட்டம் 2018 ஆம் ஆண்டின் ...................... ஆம் இலக்க, மேல் மாகாணத்தின் விசாய சேவைகள் அதிகார சபை நியதிச் சட்டத்தினைத் திருத்துவதற்கு உரிய நியதிச் சட்டம் என அழைக்கப்படுவதுடன் மேல் மாகாணத்தின் ஆளுநரின் அங்கீகாரம் கிடைத்த தினத்தில் இருந்து நடைமுறைக்கு வர வேண்டும்.

*குறுந் தலைப்பும் நடைமுறைக்கு வரும் தினமும்.*

2. இதனகத்துப் பின் "பிரதான நியதிச் சட்டம்" என்று அழைக்கப்படும் மேல் மாகாண விவசாய சேவைகள் அதிகார சபை நியதிச் சட்டத்தின் 3 ஆவது பிரிவினை அகற்றி அதற்காக பின்வரும் பிரிவினை பிரதியிட்டு அப்பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது :

*3 ஆவது பிரிவினைத் திருத்துதல்.*

> விவசாய அபிவிருத்தியின் ஊடாக மாகாணத்தின் விவசாய மக்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல், காணியை வினைத்திறன் மிக்கதாக பயிற்சி செய்யத் தேவையான அறிவு, நவீன தொழில்நுட்பம் மற்றும் சலுகைச் சேவைகளைப் பெற்றுக் கொடுப்பது அதிகார சபையின் நோக்கமாதல் வேண்டும்.


1A - PG 4120 — 207 (2018/07)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

4 ஆவது பிரிவினைத் திருத்துதல்.

3. பிரதான நியதிச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் (2) ஆம் உப பிரிவு இங்கு அகற்றப்படுவதுடன் அதற்குப் பதிலாகப் பின்வரும் உப பிரிவினைப் பிரதியிட்டு அப்பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(2) முகாமைத்துவ அதிகார சபை, பின்வரும் ஏழு அங்கத்தவர்களையும் கொண்டதாக இருத்தல் வேண்டும் :

(அ) பின்வரும் நான்கு அங்கத்தவர்களும் பதவி நிலையின் அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டும் :

(i) விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ஒருவர் ;
(ii) மாகாண விவசாயப் பணிப்பாளர் ;
(iii) மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் ;
(iv) பிரதிப் பிரதம செயலாளர் (நிதி).

(ஆ) மாகாண விடயப் பொறுப்பு அமைச்சரினால் நியமிக்கப்படும் (இதனகத்துப்பின் ''நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள்'' என்று அழைக்கப்படும்) கீழே குறிப்பிடப்படும் அங்கத்தவர்கள் :

(i) விவசாயத் துறையில் பிரயோக அறிவு உள்ள நபர் ஒருவர் ;
(ii) சூழல் விஞ்ஞானம் அல்லது சூழல் பாதுகாப்பு ஆகிய விடயங்கள் தொடர்பான அறிவு உள்ள நபர் ஒருவர் ;
(iii) விவசாய உற்பத்தி, விற்பனை தொடர்பாக அறிவு உள்ள நபர் ஒருவர்.

6 ஆவது பிரிவினைத் திருத்துதல்.

4. பிரதான நியதிச் சட்டத்தின் 6 ஆவது பிரிவின் (8) ஆம் உப பிரிவு இங்கு அகற்றப்படுவதுடன் அதற்குப் பதிலாகப் பின்வரும் உப பிரிவினைப் பிரதியிட்டு அப்பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது :

(8) முகாமைத்துவச் சபையின் செயலாளராக பிரதான நிறைவேற்று அலுவலகர் அல்லது வேறு உரிய அலுவலகர் ஒருவரை நியமிக்க இயலும்.

8 ஆவது பிரிவினைத் திருத்துதல்.

5. பிரதான நியதிச் சட்டத்தின் 8 ஆவது பிரிவின் (12) ஆம் உப பிரிவிற்கு அடுத்ததாக பின்வரும் உப பிரிவுகள் உள்ளடக்கப்படுவதுடன் அந்த உப பிரிவுகள் முறையே, (13), (14), (15), (16), (17), (18), (19) ஆக நடைமுறைக்கு வர வேண்டும்.

(13) பயிரிடக்கூடிய எனினும் பயிரிடப்படாத காணிகளைப் பயிரிடுவதற்காக சமூகத்தினை ஊக்கப்படுத்துதல்.

(14) சார்ந்த பயிர்கள் அல்லது வியாபார ரீதியிலான பயிர்கள் அல்லது சுற்றாடல் விஞ்ஞான ரீதியில் முக்கியமான பயிர்களுக்காக அறிவு, உள்ளீடுகள், திறன்கள் மற்றும் சலுகைகளைப் பெற்றுக்கொடுப்பதன் ஊடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு இடவசதியினை ஏற்படுத்திக் கொடுத்தல்.

(15) பயிர்களைத் தெரிவுசெய்தல், நாற்று மேடைகளை அமைத்தல், விதைகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் பயிரிடும் முறை தொடர்பாக தொழில்நுட்ப, ஒத்துழைப்பு மற்றும் பயிற்சியினை வழங்குதல்.

(16) சுற்றாடலுக்கு ஏற்ற பயிர்ச்செய்கைகளுக்கு ஊக்கப்படுத்தல் மற்றும் மேம்பாடு செய்தல்.

(17) வியாபாரத்தினை அடிப்படையாகக் கொண்ட விவசாய தொழில்நுட்ப சேவைகளை வழங்குதல்.

(18) விவசாய வியாபார முயற்சியாளர்களுக்காக நிதி வசதிகளை வழங்குதல்.

(19) மாகாண விவசாய அமைச்சின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களில் தேவையான சலுகைகளைப் பெற்றுக்கொடுத்தல்.

*6.* (1) பிரதான நியதிச் சட்டத்தின் 9 ஆவது பிரிவின் (5) ஆம் உப பிரிவை அகற்றி அதற்குப் பதிலாகப் பின்வரும் உப பிரிவினை உள்ளடக்கி, — 9 ஆவது பிரிவினைத் திருத்துதல்.

(5) மாகாண அதிகாரிகளினால் இடைக்கிடையே வெளியிடப்படும் ஏற்பாடுகளுக்கு இணங்க படி மற்றும் வேதனத்தினைத் தீர்மானித்தல், சேவை நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு உரிய குறித்த விடய ஒழுங்குவிதிகள் மற்றும் ஒழுக்கக் கோவைகளைத் தீர்மானித்தல், அதிகார சபையின் நிதியத்தின் நிதி நிர்வாகம் தொடர்பான கட்டளைகள் இந்நியதிச் சட்டத்தின்கீழ் தயாரிக்கப்படும் விதிகளின் கீழ் அமுல்படுத்தப்பட வேண்டும்.

எவ்வாறான போதும், அதிகார சபையின் அலுவலர்களின் நிர்வாகத்திற்கு அதிகார சபையினால் ஒழுக்காற்றுக் கோவை தயாரிக்கப்படும் வரை மேல் மாகாணத்தின் அரச சேவையின் அலுவலர்களுக்காக உரியதாக்கிக்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று ஒழுங்குவிதிகளையும், அதிகார சபையின் நிதியத்தின் நிதி நிர்வாகத்திற்காக மேல் மாகாண நிதிப் பிரமாணத்தினை ஏற்ற அளவில் உரியதாக்கிக்கொள்ள வேண்டும் ;

அத்துடன்

(2) 9 (10) ஆம் உப பிரிவிற்கு அடுத்ததாக 9 (11) ஆக பின்வரும் உப பிரிவினை உள்ளடக்கி,

(11) இந்த நியதிச் சட்டத்தின் கீழ் நோக்கத்தினை நிறைவேற்றிக்கொள்வதற்குரிய எல்லா அதிகாரங்களும்.

*7.* பிரதான நியதிச் சட்டத்தின் 11 ஆவது பிரிவின் (1) உப பிரிவு இங்கு அகற்றப்படுவதுடன் அதற்குப் பதிலாகப் பின்வரும் உப பிரிவினைப் பிரதியிட்டு அப்பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது : — 11 ஆவது பிரிவினைத் திருத்துதல்.

(1) அதிகார சபைக்காக பிரதான நிறைவேற்றுத் தர அலுவலகர் ஒருவர் இருக்க வேண்டியதுடன் பணிப்பாளர் அதிகார சபையின் பிரதான நிறைவேற்று அலுவலராக வேண்டும். ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு இணங்க அமைச்சின் செயலாளரினால் அதிகார சபையின் பணிப்பாளர் நியமிக்கப்பட வேண்டும்.

*8.* பிரதான நியதிச் சட்டத்தின் 12 ஆவது பிரிவு அகற்றப்பட்டு திருத்தப்படுகின்றது. — 12 ஆவது பிரிவினைத் திருத்துதல்.

*9.* பிரதான நியதிச் சட்டத்தின் 16 ஆவது பிரிவை அகற்றி இங்கு பின்வரும் பிரிவினை பிரதியிட்டு அப்பிரிவு இங்கு திருத்தப்படுகின்றது. — 16 ஆவது பிரிவினைத் திருத்துதல்.

அதிகார சபையின் அலுவலர்கள் மற்றும் சேவகர்கள் தண்டனைக் கோவையின் ஏற்பாடுகள் தொடர்பாக அரச அலுவலர்கள் மற்றும் சேவகர்களாக கருதப்பட வேண்டும் எனவும், அதிகார சபை கையூட்டல் சட்டத்தின் பொருள் கொள்ளலுக்கு இணங்க அட்டவணைப்படுத்தப்பட்ட தாபனம் ஒன்றாகக் கருதப்பட வேண்டியதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கு இணங்க உரியதாக வேண்டும்.

*10.* பிரதான நியதிச் சட்டத்தின் 17 ஆவது பிரிவில் "மாகாண சபை என்பது, மேல் மாகாண சபையினையும்" என்ற சொற்களை நீக்கி அதற்குப் பதிலாக, "மாகாண சபை" என்பது, "மேல் மாகாண மாகாண சபையினையும்" என்ற சொற்களைப் பிரதியிட்டு அப்பிரிவு இங்கு திருத்தப்படுகின்றது. — 17 ஆவது பிரிவினைத் திருத்துதல்.

இந்நியதிச் சட்டத்தின் சிங்கள மற்றும் தமிழ் மொழிப் பதங்களுக்கிடையே ஒவ்வாமை ஏற்படுமிடத்து சிங்கள மொழிப் பதமே அதிகாரம் பெற்றதாக வேண்டும். — ஒவ்வாமை ஏற்படுமிடத்து சிங்கள மொழிப் பதமே அதிகாரம் பெற வேண்டும்.

07-925

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.